பதிவு எண் M. 4729

# தமிழ் ஹரிஜன்

தமிழ்ப்பண்ணை வெளியீடு: ஆசிரியர்கள் பொ. திருகூட சுந்தரம், நாமக்கல் கவிஞர்

மகாத்மா காந்தியடிகளின் வாரப் பத்திரிகை

38 ] சென்னை — ஞாயிறு, டிசம்பர் 29, 1946. [ விலை. அணா. 2

## பலாத்காரம் பயன்படாது

*பிரான்ஸ் தேசத்தின் தலைநகர் ஆகிய பாரிஸிலுள்ள மார்ட்டின் என்னும் பத்திரிகையின் ஆசிரியரான திரு ரெயிமண்டு கார்டியர் என்பவர் செய்கோனுக்குப் போகும் வழியில் காந்தியடிகளைச் சந்திப்பதற்காக ஸ்ரீராம்பூருக்கு போனார். அவர் காந்தியடிகளுடைய குடிசைக்குச் சென்றபொழுது, காந்தியடிகள், நெற்றியிலும் வயிற்றிலும் மண் வைத்துக் கட்டிக்கொண்டிருந்தார். காந்தியடிகள் திரு கார்டியரைக் கண்டதும் பிரஞ்சு பாஷையில் முகமன் கூறினார். அதைக் கண்டு திரு. கார்டியர் ஆச்சரியப்பட்டார்.*

*திரு கார்டியர் "பலாத்காரத்தில் வளர்ந்த மக்கள் ஹிட்லர் உபயோகித்த மாதிரியான பலாத்காரத்தை எப்படி அஹிம்சை மூலம் வெல்ல முடியும்" என்று கேட்டார்.*

*அதற்கு காந்தியடிகள் கீழ்க்கண்டவாறு மிகுந்த உணர்ச்சியுடன் பதிலுரைத்தார் :—*

"ஹிட்லரின் ஹிம்ஸையை அதைவிட உயர்ந்த ஹிம்ஸையால் வெல்லலாம். ஆனால் ஹிம்ஸையை ஹிம்ஸையால் வெல்வது என்பதற்கு முடிவு கிடையாது. அந்த வழியை அனுஷ்டித்தால் அழிவு நிச்சயம். சிறிய தேசங்கள் இறப்பது திண்ணம். எப்பொழுது ஒரு மனிதனோ தேசமோ பலாத்காரத்துக்குப் பணிய மறுக்கிறார்களோ அதற்காக உயிரை துறக்கச் சித்தமாயிருக்கிறார்களோ அப்பொழுதுதான், அவர்கள் சாகாமல் பிழைக்க முடியும். எவ்வளவு எதிர்ப்பு ஏற்பட்ட போதிலும் பாதுகாப்பளிக்கக்கூடிய ஒரே ஆயுதம் அஹிம்ஸை ஒன்றுதான். ஆனால் அந்த ஆயுதத்தை உபயோகிக்க எந்த நிமிஷத்திலும் தளராத மனோதைரியம் தேவையாகும். இன்று ஐரோப்பாவிலுள்ள ஜனங்கள் வாயால் மட்டுமே சமாதானத்தைப் பற்றி பேசுகிறார்கள். ஹிருதயத்திலிருந்து இன்னும் யுத்த வெறி நீங்காமலேதான் இருந்து கொண்டிருக்கிறது. அதைக் காண எனக்கு வருத்தமா யிருக்கிறது. ஐரோப்பியர்கள் தங்கள் வழியை திருத்திக்கொள்ளா விட்டால் மறுபடியும் ஒரு உலக யுத்தம் தோன்றுமென்று எச்சரிக்க விரும்புகின்றேன். அந்த யுத்தம் அதைவிட பயங்கரமான யுத்தத்துக்கு அடிகோலும். ஜனநாயக மென்பது அடியோடு அழிந்துபோகும். ஆதலால் ஒரு புதிய உலகத்தைச் சிருஷ்டிப்பதற்காக நாம் ஒரு புது மாதிரியான கல்வி முறையை ஏற்படுத்த வேண்டும். இத்தகைய எண்ணமுடையவர்கள் இன்று சிறுபான்மையோராக இருக்கலாம். ஆனால் ஐரோப்பா அழிந்து போகாமல் பாதுகாக்க வேண்டுமானால் அஹிம்ஸையை அனுஷ்டித்துத் தீரவேண்டியதே யாகும்."

## சமாதானத் திட்டம்

காந்தியடிகள் கிழக்கு வங்காளத்திலுள்ள நோவாகாளியில் அனுஷ்டித்துவரும் சமாதானத் திட்டத்தைப்பற்றி, திரு. சத்திஷ் சந்திரதாஸ் குப்தா, அமெரிக்க பத்திரிகா நிருபர் ஒருவருக்கு கீழ்க்கண்டவாறு விளக்கிச் சொன்னார் :—

"காந்தியடிகளின் சமாதானத் திட்டம் நான்கு முக்கிய தத்துவங்களை யுடையதாகும்.

1. ஆத்மீக முயற்சி
2. நல்ல குணமே மனிதப் பண்பின் சாராம்சம்.
3. அன்பு.
4. வீரர்களின் அஹிம்சை.

ஹிந்துக்களும் முஸ்லிம்களும ஒன்று சேர்வதற்கு உண்மையிலே எவ்விதத் தடையு மில்லை என்று நிலை நாட்டுவதே காந்தி யடிகளுடைய சமாதானத் திட்டத்தின் நோக்கமாகும். இங்கே ஹிந்துக்கள் சிறுபான்மையோரா யிருக்கிறார்கள். அவர்களுடைய மனத்தில் தைரியத்தை உண்டாக்கவும் அக்கிரமிகள் மனத்தில் பச்சாதாபத்தை உண்டாக்கவும் விரும்புகிறார். ஹிந்துக்களிடம் பயமும் முஸ்லிம்களிடம் துவேஷமும் இருக்கும் வரை ஒற்றுமை யுண்டாக மாட்டாது.

இனி எந்தக் காலத்திலும் அக்கிரமங்கள் தோன்றாதிருக்குமாறு செய்வதே காந்தியடிகள் செய்ய விரும்பும் புரட்சியாகும்.

சமாதானத்தை உண்டாக்குவதற்காக உழைக்கும் ஊழியர்கள் உண்மையையும் அன்பையும் அஹிம்ஸையையும் கைக்கொள்ள வேண்டும். அவர்கள் அக்கிரமங்கள் நடந்த கிராமங்களில் வசிக்க வேண்டும். அக்கிரமிகள் உள்பட எல்லோருடனும் உடன் பிறந்த சகோதரர்கள் போல் நடந்து கொள்ள வேண்டும். யாரேனும் எதிர்த்தால் அவரைத் தாக்க வேண்டுமென்ற எண்ணம் அணுவளவேனும் இருக்கக் கூடாது. அவருக்குள்ள ஒரே பாதுகாப்புத் தம்மை தாக்குவோர் கையால் இறக்கத் தயாராயிருப்பதே யாகும். இத்தகைய மனோ தைரியம் உண்டாகி விட்டால் சூழ் நிலை முழுவதும் அடியோடு மாறி விடும். கோழைகள் கோழைத்தனத்தை விட்டு விடுவார்கள். பகைவர்கள் துவேஷத்தை விட்டு விடுவார்கள். இராணுவத்தைக் கொண்டோ, போலீஸைக் கொண்டோ ஏற்படுத்தும் சமாதானம் நீடித்திருக்க மாட்டாது. ஆனால் காந்தி யடிகள் முறையால் ஏற்படும் சமாதானம் உண்மையானதாகவும் நீடித்ததாகவும் இருக்கும். இந்தத் திட்டத்தை ஒரு மாத காலமாக அனுஷ்டித்து வருகிறோம். அதன் பயனாக ஹிந்துக்கள் பயமில்லாமல் நடமாட ஆரம்பித்திருக்கிறார்கள். முஸ்லிம்கள் பகைமையையும் கோபத்தையும் துறந்து வருகிறார்கள்.

இந்த மாதிரி இந்தியாவிலுள்ள காங்கிரஸ்காரர்கள் வீரர்களின் அஹிம்சையாகிய ஆயுதத்தைக் கையாள்வதனால் உலக முழுவதும் வெகு விரைவில் புதிய உலகமாக மாறி விடும்.

## சத்தியாக்கிரகத் திட்டமில்லை

டிஸம்பர் 20-ம் தேதி பத்திரிகா நிருபர் ஒருவர் காந்தியடிகளிடம் "தாங்கள் இங்கிருந்து கொண்டு அகில இந்திய சத்தியாக்கிரக இயக்கம் ஆரம்பிப்பதற்கு திட்டம் போட்டுக் கொண்டிருப்பதாக ஒரு வதந்தி கிளம்பி இருக்கிறதே அது உண்மைதானா?" என்று கேட்டார்.

காந்தியடிகள் அன்று மாலை நடந்த பிரார்த்தனைக் கூட்டத்தில் அந்தக் கேள்விக்கு கீழ்க் கண்டவாறு பதில் கூறினார் :—

"நான் சத்தியாக்கிரகியானதால் இந்தக் கேள்வியை அலக்ஷியம் செய்வதற்கில்லை. இத்தகைய வதந்திகளைப் பரப்புவோர் தங்களுக்கு எவ்வித நன்மையும் தேடிக் கொண்டவர்கள் ஆக மாட்டார்கள். ஆனால் அவர்கள் சகல சமூகங்களுக்கும் தீமை தேடுகின்றார்கள் என்பது நிச்சயம். நான் என்னுடைய ஆசிரமத்தில் வைத்துத் தான் சத்தியாக்கிரகத்துக்குத் திட்டம் போடுவது வழக்கம். சாம்பரானில் மட்டும் தான் நான் அந்த இடத்தில் திட்டம் போட வேண்டியதாயிற்று. அதுவும் கூட நானாகத் திட்டம் போட வில்லை. திட்டம் போட வேண்டிய நிர்ப்பந்தம் உண்டாகி விட்டது. அங்கே என்னைத் தவிர வேறு யாருக்கும் சத்தியாக்கிரகம் செய்ய நான் இடம் கொடுக்க வில்லை. நான் சத்தியாக்கிரகத்துக்கான சூழ் நிலை உண்டா யிருந்தால்தான் சத்தியாக்கிரகத்தை ஆரம்பிப்பது வழக்கம். இப்பொழுது நான் நோவாகாளியில் தங்கி இருப்பதின் நோக்கம் இரண்டு சமூகத்தா ரிடையிலும் ஒற்றுமையும் சமாதானமும் உண்டாகும்படி செய்வதே யாகும். இந்தக் காரியம் சத்தியாக்கிரகத்தின் மூலம் நடக்கக் கூடிய காரிய மன்று. இன்று என்னுடைய அஹிம்ஸை கடுமையான சோதனைக்கு உள்ளாகி இருக்கிறது. எங்கு பார்த்தாலும் நம்பிக்கை யின்மை பரவி இருக்கிறது. இந்த நிலைமையில் நம்பிக்கையை உண்டாக்குவதற்கான வழியைக் கண்டு பிடிப்பதிலேயே முனைந்திருக்கிறேன். நான் ஹிந்துக்களுடைய நண்பனாகவும் வரவில்லை. முஸ்லிம்களுடைய நண்பனாகவும் வரவில்லை. எல்லோருடைய நண்பனாகவும் வந்திருக்கிறேன். உண்மை என்றும் வெல்லும் என்ற நம்பிக்கையுடன் வாழ்ந்து வருகின்றேன்.

## சர்க்கார் எதற்கு ?

டிஸம்பர் 21-ம் தேதி மாலை பிரார்த்தனைக் கூட்டத்திற்கு முன்னதாக சில நண்பர்கள் கிராமங்களை விட்டு வெளியே இருக்கும் ஹிந்து அகதிகளுக்கு உதவி அளிப்பது சம்பந்தமாகவும் மறுபடியும் அவர்கள் கிராமங்களில் போய் இருப்பதற்கு வேண்டிய வசதிகளை அளிப்பதற்காகவும் என்ன செய்ய வேண்டும் என்பதைப் பற்றி ஆலோசிப்பதற்காக காந்தியடிகளிடம் வந்திருந்தார்கள். அந்த விஷயத்தைப் பற்றி பிரார்த்தனைக் கூட்டத்தில் காந்தி யடிகள் கீழ்க் கண்டவாறு கூறினார் :—

"பிச்சை ஏற்பதும் பிச்சை கொடுப்பதும் தவறாகும். நம்முடைய நாட்டில் மதம் என்ற பெயரால் மத விரோதமான காரியங்கள் நடைபெற்று வருகின்றன. இந்தியாவில் 56 லக்ஷம் சந்நியாஸிகள் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. அவர்களில் பெரும்பாலோரைச் சந்நியாஸி என்ற பெயருக்கு தகுதியுடையவர்களாகக் கருத முடியாது. தீண்டாமை என்னும் தீயவழக்கம்கூட இந்த துக்ககரமான நாட்டில் மதத்தின் பேரால் இன்னும் நடமாடிக்கொண்டிருக்கிறது. இந்தியாவில் சகல பாகங்களிலிருந்தும் ஜனங்கள் நோவாகாளியில் கஷ்டத்துக்காளாகி இருக்கும் மக்களுக்கு பொருளும் மற்ற வஸ்துக்களும் கொடுத்துதவ ஆவலுடையவர்களா யிருக்கின்றார்கள். ஆதலால் நோவாகாளி மக்கள் பிறர் உதவியை நம்பி வாழும் மனப்பான்மையை அடைந்துவிடக் கூடும். உதவி அளிப்போர் புண்ணிய கைங்கரியம் செய்வதாக எண்ணுவது தவறு. அதுபோலவே நோவாகாளி மக்கள் பிறர்கையை எதிர்பார்த்து வாழலாம் என்று எண்ணுவதும் தவறு. ஜனங்கள் அகதிகள் முகாமில் வந்து குவிந்திருக்கும்படியாக எந்தவிதமான தவறும் செய்யவில்லை. அவர்களில் பலருடைய வீடுகள் கொளுத்தப்பட்டுப் போயின. அநேகருடைய பொருள்கள் கொள்ளை யடிக்கப்பட்டு விட்டன. மூன்றாவது பகுதியினர் அபாயம் நேரும் என்று அஞ்சியே தங்கள் வீடுகளை விட்டு ஓடிவந் திருக்கிறார்கள். சர்க்கார் அவர்களுடைய நிலைமைக்குத் தக்கவாறு உதவி செய்ய வேண்டும். அவர்களுடைய மனதில் வீட்டிற்குத் திரும்பிப்போனால் மறுபடியும் அபாயம் வராது என்ற எண்ணம் உண்டாகும்படி செய்யவேண்டும். வீட்டுக்கு பயமில்லாமல் திரும்பிப் போகும்படியான நிலைமை ஏற்படுவதற்கு முன்னதாக அவர்களுக்கு ஆகாரம் கொடுப்பதை சர்க்கார் நிறுத்துவது சரியன்று. அகதிகள் தாங்களாகவேதான் திரும்பிப் போய் வாழ்க்கையை நடத்துவதற்கு வேண்டிய காரியங்களைச் செய்துகொள்ள வேண்டுமென்று சொன்னால் அரசாங்கம் இருக்கவேண்டியதன் அவசியம் என்ன? இப்பொழுதுள்ள நிலைமையில் அரசாங்க ஸ்தாபனங்கள்தான் சமூகச் சேவைகளைச் செய்யவேண்டும்.

ஜனங்கள் பயப்படாமல் திரும்பிப்போய் வாழ்வதற்கு வேண்டிய பாதுகாப்பைப் போதுமான அளவு கொடுக்கவேண்டும். அந்த நிலைமை உண்டாகும் வரை அகதிகளுக்கு கொடுத்துவரும் உதவிகளை நிறுத்திவிடக் கூடாது.

ஆனால் பொதுஜன தர்ம ஸ்தாபனங்களின் விஷயம் வேறு. ஜனங்களுடைய உதவியைக் கொண்டு வாழ்வது தவறு. தென் ஆப்பிரிக்காவில் நான் சத்தியாக்கிரகத்தை நடத்தியபொழுது சத்தியாக்கிரகிகளின் செலவுக்காக ஜனங்கள் ஏராளமான பணத்தை நன்கொடை யளித்தார்கள். சத்தியாக்கிரகிகளுடைய குடும்பங்களுக்கு வேலை கொடுத்துக் காப்பாற்றுவதற்காக ட்ரான்ஸ்வால் பிரதேசத்தில் லாலி என்னும் பட்டணத்துக் கருகில் டால்ஸ்டாய் பாரம்என்னும் ஆச்சிரமம் ஆரம்பிக்கப்பட்டது. அதன் பயனாக சத்தியாக்கிரக இயக்கம் முடிவு பெற்றபின் பெற்ற பணங்களைத் திரும்பக் கொடுத்துவிட்டோம். அதேமாதிரியாக இங்குள்ள தர்ம ஸ்தாபனங்கள், வேலை செய்யாமல் சாப்பிடுவது அவமானம் என்று ஜனங்களிடம் தெளிவாகச் சொல்லிவிட வேண்டும். வேலை செய்ய வெறுப்பு ஏற்படாமலும் நிலைமைக்குத் தக்கவாறு நடந்துகொள்ளவும் கற்றுக்கொண்டால் நாம் அஞ்சா நெஞ்சுடையவர்கள் ஆகிவிடுவோம். நமது தேசமக்களின் ஒழுக்கமும் உயர்ந்துவிடும்.

அகதிகள் பணமுடையவரா யிருந்தாலும் பணமில்லாதவரா யிருந்தாலும் சர்க்காரிடமிருந்து உதவி பெறுவது மனித கௌரவத்திற்கு ஏற்றதன்று என்று அதிகாரிகளிடம் கூறிவிடவேண்டும். பணக்காரர்களும் ஏழைகளும் ஒன்றுமில்லாமல் எல்லாவற்றையும் இழந்துவிட்டார்கள். ஆதலால் அவர்களுக்கு உணவும் உடையும் தங்க இடமும் வைத்திய வசதியும் தேவையாகும். உயிர் வாழ்வதற்கு இன்றியமையாத இவைகளைச் சர்க்காரிடம் பெறுவதற்கு அவர்களுக்கு உரிமை யுண்டு. ஆனால் அவர்கள் தங்கள் சக்திக்கு ஏற்றவாறு வேலை செய்யாமல் இந்த உதவிகளைப் பெறுவார்களானால் அவர்கள் சமூகத்தைக் கொள்ளை யடித்தவர்கள் ஆவார்கள். ஆதலால் அவர்கள் தங்கள் சக்திக்குத் தகுந்த உபயோகமான வேலையைத் தருமாறு சர்க்காரிடம் கேட்டுக்கொள்ள வேண்டும்.

## இந்தியாவின் நியாயம்

திருமதி விஜயலக்ஷ்மி பண்டிட்டும் அவருடன் சென்ற திறமை வாய்ந்த சகாக்களும் ஐக்கிய நாட்டு ஸ்தாபனத்தின் அஸம்பளியில் தென் ஆப்பிரிகாவை எதிர்த்து வாதாடி வெற்றிபெற்றிருக்கிறார்கள். அதற்காக இந்தியா சந்தோஷமும் பெருமையும் அடைகிறது. திருமதி பண்டிட் மேற்கொண்ட காரியம் சுலபமானதன்று. தென் ஆப்பிரிகா பிரதம மந்திரியான தளபதி ஸ்மட்ஸ் மிகுந்த திறமையும் புகழும் பெற்ற ராஜதந்திரி ஆவார். அவர் அந்த அஸம்பளியில் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் மிகுந்த வன்மையுடன் வாதாடினார். அத்துடன் அவருக்கு பிரிட்டிஷ் சர்க்காருடைய பக்கபலமும் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்திலுள்ள மற்ற நாடுகளின் பக்க பலமும் இருந்தன. இந்த கஷ்டமான நிலைமையில் திருமதி பண்டிட் வெற்றி பெற்றது பாராட்டத் தக்கதாகும். அவர் இந்தியாவின் நியாயமான கக்ஷியை உத்சாகத்துடனும் கௌரவத்துடனும் பேசி ஜயித்திருக்கிறார். பல நாட்டாருடைய அனுதாபத்தை இந்தியாவுக்குக் கிடைக்கும்படி செய்திருக்கிறார். சைனா, ரஷ்யா, பிரான்ஸ் பல ஆசிய நாடுகள் இந்தியாவுக்குச் சாதகமாக ஓட்டுச் செய்திருக்கின்றன. ஆனால் அமெரிக்காவும் பிரிட்டனும் கானடாவும், டென்மார்க்கும் பெல்ஜியமும் இந்தியாவுக்கு விரோதமாக ஓட்டுச் செய்திருக்கின்றன.

தென்மேற்கு ஆப்பிரிகாவை தென் ஆப்பிரிகாவோடு சேர்க்கும் பிரச்சனை விஷயத்திலும் இந்திய தூது கோஷ்டியார் தளபதி ஸ்மட்ஸை பலமாக எதிர்த்திருக்கிறார்கள். இந்த விஷயத்திலும் தென் ஆப்பிரிக்கா பிரதம மந்திரி அடையவேண்டிய தோல்வியை அடைந்திருக்கிறார்.

தென் ஆப்பிரிகாவில் இந்திய போராட்டம் ஆரம்பமான காலத்திலிருந்து நாம் பெற்ற வெற்றியின் பெரும் பாகத்துக்குக் காரண கர்த்தர்கள் இந்தியப் பெண்களாகவே இருந்திருக்கிறார்கள் என்பது குறிப்பிடத் தகுந்ததாகும். கஸ்தூரிபா காந்தியின் பெயரும் திருமதி சரோசனியின் பெயரும் என்றென்றும் மரியாதையுடனும் பெருமையுடனும் போற்றப் படும். இப்பொழுதும் பாரதமாதாவின் புத்திரிதான் வெற்றி பெற்று வந்திருக்கிறார். ஐக்கிய நாட்டு அஸம்பிளியில் அவர் ஒருவரே பெண் பிரதிநிதி. அவர் இந்தியாவின் கௌரவத்தை உலகத்தார் முன்னிலையில் அதிகமாக உயர்த்தி இருக்கிறார்.

இந்தியாவை ஆதரித்த 31 நாடுகளுக்கும் நம்முடைய மனமார்ந்த வந்தனம் உரியதாகும். அவர்கள் மூலாதாரமான உரிமைகளை ஆதரித்ததன் காரணமாக ஐக்கிய நாட்டு ஸ்தாபனத்தின் பெருமையை அதிகப் படுத்திருப்பதோடு, அடிமையாயிருந்துவரும் நாடுகளுக்கு விமோசனம் உண்டென்ற நம்பிக்கையை ஊட்டி இருக்கிறார்கள்.

கே. ஜி. எம்.

## ஒரு நல்ல பிரசுரம்

டெக்கா நகரிலுள்ள மௌல்வி அஸனுல்லா சாகிப் "புனிதமான இஸ்லாத்தின் நன்கொடை" என்ற பெயருடன் ஒரு பிரசுரம் தயாரித்து இலவசமாக ஹிந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் விநியோகித்து வருகிறார். அதை வங்காளியிலும் உருதுவிலும் அச்சிட்டிருக்கிறார். அதன் பிரதி ஒன்றை காந்தியடிகளுக்கு அனுப்பி இருக்கிறார். அது ஒரு நல்ல பிரசுரம். அதன் சாராம்சத்தை கீழே தருகிறேன்:—

முஸ்லிம் ஆண்களும் பெண்களும் இஸ்லாம் மதத்தின் ஹிதோபதேசங்களை அறிந்து கொள்வதற்காக எழுதப் படிக்க கற்றுக்கொள்ளவேண்டும். நபி நாயகம் தெளிவாக கூறுவதாவது :—

"ஒவ்வொரு முஸ்லிம் ஆணும்-பெண்ணும் கல்வி கற்றுக்கொள்ள வேண்டியது கடமையாகும். பண வசதி உடைய குடும்பத்தில் பிறந்தபோதிலும் கல்வி கற்றுக்கொள்ளுதல் அவசியமாகும்"

இஸ்லாம் மதமானது சாந்தியையும் தியாகத்தையும் அடிப்படையாகக் கொண்ட மதமாகும்.

அதற்கு ஐந்து தூண்கள் உள.

(1) கல்மா (வேதம்)
(2) நமாஸ் (பிரார்த்தனை)
(3) ரோஸா (உண்ணாவிரதம்)
(4) ஸக்காத் (தானம்)
(5) ஹஜ் (புண்ணிய யாத்திரை)

முதல் மூன்றும் சகலரும் அனுஷ்டிக்க வேண்டியவை. இறுதி இரண்டும் தனவந்தர் அது படிக்க வேண்டியவை.

கீழ்க்கண்ட பத்து விதிகளையும் அனுசரித்து நடந்தால் இகத்திலும் பரத்திலும் இன்பம் கிடைக்குமென்று குர்ஆன் கூறுகின்றது :—

1. தவறு செய்ததற்காக காலையில் பிரார்த்தனை செய்தல்.

2. நரகத் தீயிலிருந்து காப்பாற்றப் படுவதற்காக முற்பகல் பிரார்த்தனை.

3. கடனிலிருந்து விடுதலை பெறுவதற்காகப் பிற்பகல் பிரார்த்தனை.

4. பகைவர்களிடமிருந்து காப்பாற்றப்படுவதற்காக மாலைப் பிரார்த்தனை.

5. இறுதித் தீர்ப்பு நாளில் முன் கூட்டி விசாரிக்கப் படுவதற்காக இரவுப் பிரார்த்தனை.

6. பணம் தேடுவதற்காக வியாபாரமும் தொழிலும்.

7. சாந்தியும் சமாதானமும் ஏற்படுத்துவதற்காக தான தர்மங்கள்.

8. நோயில்லாமல் இருப்பதற்காக ஸ்நானமும் சுத்தமான வாழ்க்கையும்.

9. புகழ் பெறுவதற்காக கல்வியும் பண்பாடும்.

10. தலைமை பெறுவதற்காக பிரார்த்தனையும் சேவையும் பணிவும் மரியாதையும்.

கடவுள் காட்டும் நெறியில் செல்ல விரும்புவோர் அனுஷ்டிக்கவேண்டிய அறங்கள் பத்து என்று பீர் தஸ்தாகீர் ரஹமதுல்லா என்னும் பெரியார் கூறுகிறார். அவர் கூறும் அறங்களாவன :—

1. ஆணை இடலாகாது.

2. விளையாட்டுக்குக் கூட பொய் சொல்லலாகாது.

3. கொடுத்த வாக்கை மீறக்கூடாது.

4. அல்லாவின் சிருஷ்டிகளில் மிகக் கேவலமானதைக்கூட இழிவாக எண்ணவோ துன்புறுத்தவோ கூடாது.

5. சபிக்கக்கூடாது.

6. வஞ்சகம் செய்வதாக யாரையும் கூறக்கூடாது.

7. பாபச் செயல்கள் செய்யாமலிருக்கவேண்டும்.

8. பிறரைத் துன்புறுத்தலாகாது.

9. பிறர்பொருளை இச்சித்தல் ஆகாது.

10. பணிவாக இருக்கவேண்டும்.

கே. ஜி. எம்.

சுதந்திரம் இழந்தவனே சுதந்திரத்தின் இன்பத்தை அறிவான்—ஸ்ரீனிவாஸ சாஸ்திரி.

# தமிழ் ஹரிஜன்

தமிழ்ப்பண்ணை வெளியீடு: ஆசிரியர்கள் பொ. திருகூட சுந்தரம், நாமக்கல் கவிஞர்

டிசம்பர் 29 ஞாயிறு 1946


## தென் ஆப்பிரிக்கா செய்யப்போவது யாது?

இடைக்கால சர்க்கார் ஐக்கிய நாட்டு ஸ்தாபனத்தின் கூட்டத்திற்கு திருமதி விஜயலக்ஷ்மி பண்டிடின் தலைமையில் அனுப்பிய பிரதிநிதி கோஷ்டியார் மிகுந்த திறமையுடன் வெற்றிகரமாக காரியங்களைச் சாதித்திருக்கிறார்கள் என்பதில் சந்தேகமில்லை. இந்த விஷயம் திருமதி விஜயலக்ஷிமி பண்டிட் நியூயார்க் நகரத்திலிருந்து எனக்கு அனுப்பிய கீழ்கண்ட தந்தியிலிருந்து விளங்குகிறது :—

"இன்று தங்கள் ஆசீர்வாதத்தால் தென் ஆப்பிரிக்காவிலுள்ள இந்தியர்களுடைய பிரச்னை நியாயமென்று நிரூபிக்கப்பட்டிருக்கிறது. நமக்குச் சாதகமாக 24-ஓட்டுகளும், பாதகமாக 19 ஓட்டுகளும் பதிவாயின. கூட்டம் முடிந்தபின் தளபதி ஸ்மட்ஸிடம் சென்று கைகுலுக்கினேன். நான்வாதித்த முறையை அவர் பாராட்டினார்."

தென் ஆப்பிரிக்கா பார்லிமெண்டும் அங்குள்ள ஐரோப்பியர்களும் எவ்விதம் நடந்துகொள்ளப் போகிறார்கள் என்பது இனிமேல் தான் தெரியும். தென் ஆப்பிரிகாவிலுள்ள ஐரோப்பியர்கள் அங்குள்ள ஆசிய மக்களையும் ஆப்பிரிக்க மக்களையும் நடத்துவதைவிட வெகு கேவலமாக இந்திய மக்கள் தங்கள் தீண்டாத வகுப்பினரை நடத்துகிறார்கள் என்ற அம்பை தளபதி ஸ்மட்ஸ் இந்திய பிரதிநிதி கோஷ்டியார் மீது எய்தார். அவருடைய கூற்று உண்மையாயிருக்குமானால் அவருடைய அம்பு கூர்மையுடையது தான். தென் ஆப்பிரிகாவிலுள்ள ஐரோப்பியர்கள் அங்குள்ள ஆசிய மக்களை சட்ட பூர்வமாக நடத்தும் விதம் நாளுக்கு நாள் கேவலமாகிக்கொண்டு வந்து இப்பொழுது தாங்க முடியாத நிலைமைக்கு வந்திருக்கிறது என்பது உண்மையாகும். இந்திய அரசாங்கத்திற்கு தென் ஆப்பிரிக்க அரசாங்கம் கொடுத்த வாக்குறுதிகள் அனைத்தும் இப்பொழுது மீறப்பட்டிருக்கின்றன. தென் ஆப்பிரிகாவின் இந்தியர்களுக்கு ஏற்படுத்தப்பட்டிருக்கும் சட்ட பூர்வமான இழிவு இந்தியாவிலுள்ள தீண்டாத மக்களுக்கு எந்த நாளும் ஏற்பட்டதில்லை. இந்தியாவில் தீண்டாத மக்களை சட்டமானது பரிபூர்ணமாக பாதுகாக்கவே செய்கின்றது. சட்டத்தில் இந்திய மக்களுக்கிடையில் எந்தவிதமான வித்தியாஸம் பாராட்டுவதற்கும் ஆதாரமில்லை. ஆனால் தீண்டாத மக்களுக்குச் சட்டம் தரும் உரிமைகளை எல்லாம் சமய சம்பந்தமான வழக்கங்கள் பறித்து விடுகின்றன. சில சமயங்களில் வழக்கமானது சட்டத்தை நிராகரித்து விடுகிறது. இவையெல்லாம் ஹிந்துக்கள் தலையைத் தொங்க விடவேண்டிய வெட்க கரமான விஷயங்களாகும். ஆயினும் இந்த அநாகரிகமான வழக்கத்துக்கு விரோதமாக பொது ஜன அபிப்பிராயம் நாளுக்கு நாள் அதிகமாகத் திரண்டு வருகிறது. இன்னும் கொஞ்ச காலத்தில் இந்த வழக்கம் இல்லாமல் ஒழிந்து விடும் என்பதில் சந்தேகமில்லை. ஆதலால் யாரும் சரியென்று ஒப்புக் கொள்ளாததும் தவறென்று ஒழிப்பதற்காக பொது ஜன அபிப்பிராயம் திரண்டு வருவதுமான இந்தத் தீய வழக்கத்தைச் சுட்டிக் காட்டுவதற்குப் பதிலாக தென் ஆப்பிரிக்காவிலுள்ள ஐரோப்பியர்கள் ஐக்கிய நாட்டு ஸ்தாபனம் உலக மக்களின் அபிப்பிராத்தையே கூறி இருப்பதால் தாங்கள் கொண்டிருக்கும் துவேஷம் தவறானது என்று உணர்ந்து கொள்வார்களென்றுநம்புகிறேன்.

ஸ்ரீராம்பூர், மோ. க. காந்தி

## கல்வி போதிக்கும் பாஷை

இது சம்பந்தமாக சர்தார் வல்லபாய் படேல் 1946 நவம்பர் 30-ம் தேதி நாகபுரி சர்வகலாசாலை பட்டமளிப்பு விழாவில் பேசியதாவது :—

தாய் பாஷையிலேயே கல்வி போதிக்க வேண்டுமென்று சர்வ கலாசாலையார் முடிவு செய்திருப்பது மிகுந்த அர்த்த புஷ்டி உள்ளதாகும். சென்ற ஐம்பது வருஷ காலத்தில் கல்வி போதிக்க அன்னிய பாஷையை உபயோகித்தது மாணவர்களின் அறிவு வளர்ச்சிக்கு தடையாயிருக்கிறது என்பதை உணர்ந்து கொண்டோம். மாணவர்கள் தங்களுக்கு வேண்டிய பதங்களை கற்றுக் கொள்வதற்காக அதிக நேரத்தை செலவு செய்ய வேண்டியவர்களாயிருக்கிறார்கள். அப்படியும் கூட அவர்கள் உபயோகிக்கும் பதங்களின் பொருளைச் சரிவர அறிந்து கொண்டார்கள் என்று சொல்ல முடியாது. வஸ்துக்களை குறிப்பதற்காகவே வார்த்தைகளை உபயோகிக்கிறோம். குழந்தை முதலில் வஸ்துக்களைப் பார்க்கிறது. அதன் பிறகே அவற்றைக் குறித்து பிறரிடம் சொல்வதற்காக வார்த்தைகளைக் கற்றுக்கொள்கிறது. இந்த முறை குழந்தைப் பருவத்தில் ஆரம்பித்து வாழ்நாள் முழுவதும் நடந்து வருகிறது. ஒரு வஸ்துவுக்கு ஒரு வார்த்தையை உபயோகிக்கக் கற்றபின் வேறொரு வார்த்தையைக் கற்கும்படி சொன்னால் அதற்கு கஷ்டமாயிருக்கிறது. அதிலும் மற்ற குழந்தைகள் உபயோகிக்காமல் தான் மட்டும் உபயோகிக்க கற்றுக்கொள்ள வேண்டுமானால் அதற்கு மிகுந்த சிரமமாயிருக்கிறது. அதன் காரணமாக குழந்தை, வார்த்தை குறிக்கும் வஸ்துவைத் தெறிந்து கொள்ளாமல் வார்த்தையை மட்டும் ஞாபகத்தில் வைத்துக்கொள்கிறது. அந்நிய பாஷையில் கல்வி போதித்தால் குழந்தைகள் வார்த்தைகளை ஞாபகத்தில் வைத்துக்கொள்ள சிரமப்படுவதோடு கற்றுக் கொடுப்பதை அறிந்து கொள்ளவும் சிரமப்பட வேண்டியதாக இருக்கிறது. அதனால் அர்த்தம் தெரியாமலே பாராமல் படிக்கும் வழக்கம் பலப்பட்டு விடுகிறது. அர்த்தம் தெரிந்து கொள்ளும் சக்தி குறைந்து விடுகிறது.

இதெல்லாம் விளக்காமலே விளங்கக்கூடிய விஷயகும். ஆனால் இந்தச் சிறு பிரச்சினையைக்கூட சரியாக அறிந்து கொள்ள முடியாதபடி நாம் நம்முடைய கல்வி முறையால் அடிமைகளாக்கப் பட்டிருக்கிறோம். அந்த விதத்தில் அமைந்திக்கிறது நமது கல்வி முறை. தாய் பாஷையிலேயே கல்வி போதிக்க வேண்டுமென்று முப்பது வருஷங்களுக்கு முன்னால் ஸாட்லர் கமிஷன் சிபார்சு செய்தது. அதன் பின் மகாத்மா காந்தியடிகள் இந்தியாவுக்கு வந்து தேச முழுவதும் பிரசாரம் செய்ய ஆரம்பித்தார். அப்பொழுது அவர் இங்கிலீஷ் பாஷை மூலம் கல்வி கற்பிப்பது நம் அறிவை வளர்ப்பதற்குப் பதிலாக க்ஷீணமடையவே செய்கிறது என்று வற்புறுத்தினார். அதன்காரணமாக சில தேசீய சர்வ கலாசாலைகள் ஆரம்பிக்கப்பட்டன. அவைகள் சர்க்கார் கட்டுப்பாடில்லாததால் தங்கள் சொந்த கல்வி முறையை அனுஷ்டிக்கக் கூடியவைகளாகவும் தாய்பாஷை மூலம் கல்வி போதிக்கக் கூடியவைகளாகவும் இருந்தன. உயர்தரக் கல்வியைக் கூட இந்திய பாஷைகள் மூலம்கற்பிக்க முடியும் என்பதை அவைகள் காட்டின. இந்திய பாஷையில் சீக்கிரத்தில் அதிகமான விஷயங்களைக் கற்றுக் கொள்ள முடியும் என்பதை நிரூபித்தன. அப்படி இருந்தும் பிரிட்டிஷ் இந்தியாவிலுள்ள ஒரு சர்வகலாசாலையாவது இங்

அடிமையாயிருக்கச் சம்மதிப்பவன் தனக்கும் துரோகி, கடவுளுக்கும் துரோகி—மாஜினி.

கிலீஷ் பாஷையை ஒதுக்கி விட்டு இந்திய பாஷைகள் மூலம் தாழ்ந்த வகுப்பிலிருந்து உயர்ந்த வகுப்புவரை கல்வி போதிக்க முன் வாயில்லை. உங்கள் சர்வகலா சாலை இந்திய பாஷைகள் மூலம் கல்வி போதிக்கத் தீர்மானித்திருப்பது ஒரு நல்ல முன் மாதிரியாகும். உங்களைப் பார்த்து மற்ற சர்வகலாசாலைகளும் உண்மையான கல்வியைப் போதிக்க உண்மையாகவே உதவி செய்யுமென்று நம்புகிறேன்.

உங்களைப் போல மற்ற சர்வகலாசாலைகள் முடிவு செய்ய முடியாமலிருப்பதற்குரிய கஷ்டங்களை அறிவேன். ஆனால் முயற்சி செய்யாமல் எந்தக் கஷ்டத்தையும் வெல்ல முடியாது. முயற்சி செய்யாதிருப்பது கோழைத்தனமாகும்.

கஷ்டங்களை எதிர்த்து வெல்லுவதுதான் உண்மையான மனோதைரியமாகும். சோம்பலே மனிதர்களில் பெரும்பாலோர்களுடைய சுபாவமாக இருக்கிறது. உடல் மட்டும் சோம்பலாயிருப்பதில்லை. மனமும் சோம்பலாயிருப்பதுண்டு. நம்மில் பலர் மனச் சோம்பலுடையவர்களாயிருக்கிறார்கள். வழக்கத்தை விட்டு விலக முயற்சி செய்வதில்லை. அப்படிச் செய்ய முயல்வது உள்ள சக்தியை வீணாக்குவதென்று கருதுகிறார்கள். இத்தகைய சோம்பல் தான் நம்முடைய சர்வகலாசாலைகள் பழைய வழிகளை அனுஷ்டிக்காமல் இருப்பதற்குக் காரணம். உயர்ந்த வகுப்புகளில் நம்முடைய பாஷைகளில் சில விஷயங்களைப் போதிப்பது கஷ்டமாக இருந்தபோதிலும் அதற்குத் தக்க புஸ்தகங்களை எழுத முடியாது என்று சொல்ல முடியாது. இதுவரை எழுதாதிருப்பதற்குக் காரணம் நம்முடைய சோம்பல் தான். உங்கள் சர்வகலாசாலை புஸ்தகங்கள் குறைவாக இருந்தபோதிலும் இந்திய பாஷையில் கல்வி போதிக்க முன் வந்திருப்பது அவர்களுடைய மனோதைரியத்தையும் தீர்க்க திருஷ்டியையும் காட்டுகிறது. கஷ்டங்கள் வரும் பொழுது அவைகளை நீக்கிக் கொள்ளலாம். கஷ்டங்கள் வருமென்று கையைக் கட்டிக்கொண்டு இருந்து விடலாகாது. உண்மையாகவே ஆசையிருந்தால் அதற்கான வழியைக் கண்டு பிடித்து விடுவோம் என்பதை உங்கள் சர்வகலாசாலை காட்டியிருக்கிறது. நீங்கள் மன உறுதியுடன் இந்தக் காரியத்தில் முன்னேறுவீர்கள் என்று நம்புகிறேன். தாழ்ந்த வகுப்பிலிருந்து உயர்ந்த வகுப்புவரை இந்திய பாஷைகள் மூலம் கல்வி போதித்தால் மாணவர்களுடைய நேரமும் மிகுதியாகும். அவர்களுடைய அறிவு விசாலமாகும். அவர்களுடைய சக்திகள் பூர்ண வளர்ச்சி அடையும்.

இந்திய பாஷைகளை கையாள வேண்டுமென்று சொல்வதைக் கொண்டு அந்நிய பாஷைகளைக்கற்க வேண்டாமென்றோ, அவைகளைக் கற்பதற்கான வசதிகளைச் செய்ய முடியாதென்றோ சொல்வதாக எண்ண வேண்டாம். உலகத்திலுள்ள எந்த தேசமும் தனித்து வாழ முடியாது. மற்ற நாடுகளுடன் தொடர்பு வைத்துக்கொள்ள வேண்டியது அவசியமாகும். அதற்கு அந்நிய பாஷைகளைக் கற்றுக் கொள்வது தேவையாகும். ஆனால் எல்லோரும் பிறநாட்டாரோடு தொடர்பு வைத்துக் கொள்வதில்லை. ஒரு சிலர் தான் அந்நியர்களுடன் தொடர்பு வைத்துக் கொள்வார்கள். அவர்கள் அந்நிய பாஷைகளைக் கற்றுக் கொள்ள வேண்டியது அவசியமாகும். அத்துடன் பிற நாடுகளிலுள்ள அறிஞர்கள் கூறுவதை அறிந்து கொள்ள விரும்புகிறவர்களும் அந்நிய பாஷைகளை கற்றுக் கொள்ள வேண்டியது அவசியமாகும். பிற நாடுகளில் பிரயாணம் செய்யவோ வியாபாரம் செய்யவோ விரும்புகிறவர்களும் அந்நிய பாஷையை ஓரளவு கற்றுக் கொள்ள வேண்டும். ஆனால் இப்படி அந்நிய பாஷையைக் கற்றுக் கொள்பவர்கள் மிகச் சிலராகவே இருப்பார்கள். அவர்களும் அந்நிய பாஷைகளை அவசியமான அளவு கற்றுக் கொண்டால் போதுமானது.

ஆயினும் அந்நிய பாஷைகளிலுள்ள தலை சிறந்த நூல்களை தங்கள் பாஷைகளில் மொழிபெயர்த்து தங்கள் தேசத்தாருக்கு வழங்கக் கூடிய பாஷா நிபுணர்கள் தேவையேயாகும். இவர்கள் அந்நிய பாஷைகளை கற்றுக் கொள்வதற்கும் அந்நிய நாடுகளுக்கு போய் வருவதற்கும் வேண்டிய வசதிகளை இவர்களுக்கு அளிக்க வேண்டும். ஆனால் நாட்டிலுள்ள ஜனங்களில் 100த்துக்கு 99 பேர் இங்கேயே தங்குபவர்கள் என்பதையும் அவர்கள் அன்னிய பாஷையைக் கற்றுக் கொள்ள வேண்டிய அவசியம் இல்லை என்பதையும் நாம் மறந்து விடலாகாது. ஆதலால் நூற்றுக்கு ஒருவருக்கு அந்நிய பாஷையைக் கற்றுக் கொள்வதற்கு வேண்டிய வசதியைச் செய்து கொடுப்பதோடு நின்று விடாமல் பாக்கி 99 பேருக்கும் கல்வி கற்பிக்க வேண்டிய வசதிகளை ஏற்படுத்துதல் அவசியமாகும்.

## சிலாகிக்கத் தகுந்த விஷயம்

பீஹாரிலுள்ள திரு. வித்யாநந்த ஜயஸ்வால் என்னும் ஒரு மாஜிஸ்ரேட் தம் மனோதைரியத்தாலும் சமயோசித சாமர்த்தியத்தாலும் தம்முடைய ஊரில் ஹிந்துக்களுக்கும் முஸல்மான்களுக்கும் இடையில் நேரவிருந்த சச்சரவைத் தடுத்து விட்டது பற்றி கீழ்க் கண்டவாறு எழுதுகிறார் :—

முஸல்மான்களுக்கு 6—11—46 பக்ரீத் பெருநாள். அன்று மாலை எங்கள் ஊரில் ஊரடங்குச் சட்டம் அமுலில் இருந்தபோதிலும் முஸ்லிம்கள் கசாப்புக் கடைப் பகுதியில் அல்லாஹு அக்பர் என்று கோஷித்துக் கொண்டிருந்தார்கள். ஹிந்துக்கள் வசித்த தெருக்களில் ஹிந்துக்கள் ஜேய் காளி நோவாகாளி என்றும் மஹாவீர் சுவாமிகி ஜே என்றும் கோஷித்துக் கொண்டிருந்தார்கள். சங்கநாதம் செய்து கொண்டிருந்தார்கள். நான் கசாப்புக் கடைப் பகுதிக்கு ஓடினேன். அங்கே நூற்றுக் கணக்கான முஸ்லிம்கள் வாள்களுடனும் ஈட்டிகளுடனும் ஹிந்துக்களைத் தாக்குவதற்கு தயாராய்க் கொண்டிருப்பதைக் கண்டேன். ஹிந்துக்களும் அவர்களைத் தாக்க தடிகளுடன் தயாராய்க் கொண்டிருந்தார்கள். நான் இரண்டு நிமிஷ நேரமாவது தயங்கிக் கொண்டு இருந்திருந்தால் ஏராளமான பிணங்கள் விழுந்திருக்கும். நான் தனியாக இருந்தேன். என்னிடம் எந்த ஆயுதமும் கிடையாது. ஆயினும் கலகத்தை அடக்க இதைத் தவிர வேறு வழியில்லை என்று எண்ணி முஸ்லிம்கள் இடையில் பாய்ந்து சென்று அவர்களிடமுள்ள வாள்களையும் ஈட்டிகளையும் பிடுங்கினேன். "என்ன முட்டாள்தனமான காரியம் செய்கிறீர்கள். வெட்கமில்லையா? பேசாமல் வீட்டுக்குச் செல்லுங்கள்" என்று சொல்லி அவர்களை வேண்டிக்கொண்டேன். கடவுள் அருளால் காந்தியடிகள் காட்டிய அஹிம்ஸா வழி வெற்றி பெற்றது. முஸ்லிம்கள் எல்லோரும் பேசாமல் தங்கள் வீடுகளுக்குத் திரும்பிச் சென்றார்கள். அதன் பிறகு நான் ஹிந்துக்களிடம் சென்று அதே வழியை அனுஷ்டித்தேன். அன்று முதல் எங்களூரில் எந்தவிதமான சச்சரவும் ஏற்படாமல் இருந்து வருகிறது.

சபர்மதி — என். பி

## காங்கிரஸ் காரிய கமிட்டியின் அறிக்கை.

அரசியல் நிர்ணய சபை சம்பந்தமாக பிரிட்டிஷ் சர்க்கார் டிஸம்பர் 6-ம் தேதி ஒரு அறிக்கை வெளியிட்டார்கள். அதை அடுத்து பார்லிமெண்டில் அது

மதத்துக்காகப் போரிடுவர், அனுஷ்டிக்கமாட்டார்—பிரீஸ்வெல்.

சம்பந்தமாக விவாதங்கள் நடை பெற்றன. அவைகளைப் பரிசிலனை செய்து காங்கிரஸ் காரிய கமிட்டியார் கீழ்க்கண்ட அறிக்கையை வெளியிட்டிருக்கிறார்கள்:—

பிரிட்டிஷ் சர்க்கார் டிஸம்பர் 6-ம் தேதி வெளியிட்ட அறிக்கையையும் அவர்கள் சார்பாக பார்லிமெண்டில் வெளியிடப்பட்ட அறிக்கைகளையும் காங்கிரஸ் காரிய கமிட்டியார் மிகவும் கவனமாக பரிசீலனை செய்தார்கள். வியாக்கியானம் செய்வதற்காகவும் தெளிவு படுத்துவதற்காகவும் இந்த அறிக்கைகளை வெளியிடுவதாகக் கூறிய போதிலும் அவைகள் அரசியல் நிர்ணய சபைத் திட்ட முழுவதற்கும் ஆதாரமாக வுள்ள மே 16-ம் தேதி பிரிட்டிஷ் தூது கோஷ்டித் திட்டத்தை மாற்றுவதாகவும் கூட்டுவதாகவும் இருக்கின்றன. பிரிட்டிஷ் இந்தியாவும் சமஸ்தானங்களும் சேர்ந்த இந்திய யூனியன் ஏற்பட வேண்டு மென்றும் யூனியன் அதிகாரங்கள் தவிர மற்ற சகல அதிகாரங்களும் அரசியல் அமைப்பில் சொல்லப் படாத அதிகாரங்களும் மாகாணங்களிடமே இருக்க வேண்டு மென்றும் கோஷ்டியாகச் சேருவது மாகாணங்களின் இஷ்டம் என்றும் அடிப்படைக் கொள்கை களாக மே 16-ம் தேதி திட்டத்தின் 15-வது பாராவில் கூறப்பட்டிருக்கிறது. ஆகவே யூனியன் சர்க்காருக்கு சில குறிப்பிட்ட விஷயங்களைக் கொடுத்து விட்டு இதர விஷயங்களிலெல்லாம் மாகாணங்கள் சுய ஆட்சி நடத்த வேண்டு மென்பதே இதன் நோக்க மாகும். பகுதிகள் எந்த முறையில் கூடவேண்டும்? கோஷ்டிகள் வேண்டுமா வேண்டாமா? கோஷ்டியில் சேர்க்கப் பட்ட மாகாணங்கள் எந்த முறையில் வெளியே வந்து விடலாம் என்பனவற்றைப் பற்றி 19-வது பாரா கூறுகிறது.

அடிப்படைத் தத்துவங்களுக்கும் நடைமுறைத் திட்டத்திற்கும் முரண்பாடு காணப்படுகிறதென்றும் மாகாண சுய ஆட்சியாகிய அடிப்படைத் திட்டத்திற்கு விரோதமாக நடை முறைத் திட்டம் இருக்கிறதென்றும் காங்கிரஸ் காரிய கமிட்டியார் தங்கள் மே 24-ம் தேதி தீர்மானத்தில் எடுத்துக் காட்டினர்கள். அதன்மீது பிரிட்டிஷ் மந்திரி தூது கோஷ்டியார் மே 25-ம் தேதி ஒரு அறிக்கை விடுத்தார்கள். கோஷ்டியில் சேர்க்கப்படும் மாகாணம் அதிலேயே இருப்பதா, விலகி விடுவதா என்பதை ஆரம்பத்திலேயே முடிவு செய்து கொள்ளலாம் என்பதாகக் காங்கிரஸ் 15-வது பாராவிற்குக் கூறும் வியாக்கியானம் தூது கோஷ்டியாரின் நோக்கத்துக்கு விரோதமானதாகும் என்று அவர்கள் அந்த அறிக்கையில் கூறினர்கள். மாகாணங்களை கோஷ்டிகளாக தூது கோஷ்டியார் பிரித்த காரணங்கள் எல்லோருக்கும் தெரிந்தவை. திட்டத்தின் அடிப்படையான அம்சம் இதுதான். அதை இரண்டு கக்ஷியாரும் சம்மதித்தால்தான் மாற்றி அமைக்கலாம். தகராரிலுள்ள விஷயம் நடைமுறையை மட்டும் பொறுத்ததன்று. மாகாண சுயாக்ஷி என்னும் மூலாதாரமான கொள்கையையும் மாகாணத்தையோ அதன் பகுதியையோ அதன் விருப்பத்துக்கு மாருக நிர்ப்பந்திக்கலாமா என்பதையும் பொறுத்ததாகும். காங்கிரஸ் கமிட்டியார் இந்த விஷயத்தை விளக்கியிருக்கிறார்கள். காங்கிரஸ் ஆக்ஷேபிப்பது மாகாணங்கள் கோஷ்டிகளாகப் பிரிவதற்கன்று: மாகாணங்களை நிர்ப்பந்தத்தின்மேல் பிரிப்பதையும் ஒரு மாகாணம் மற்றொரு மாகாணத்தின் விருப்பத்திற்கு மாருக அதன் அரசியலை வகுப்பதையுமே காங்கிரஸ் ஆக்ஷேபிக்கிறது. அந்த மாதிரிச் செய்ய இடம் கொடுத்தால் விதிகள் அமைப்பதையும் வாக்குரிமை நிர்ணயிப்பதையும் தொகுதிகள் பிரிப்பதையும் சட்டசபை அமைப்பதையும் கோஷ்டியிலிருந்து விலகமுடியாதபடிச் செய்துவிட முடியும். இப்படி நடந்தால் அது தூது கோஷ்டியாருடையத் திட்டத்தின் கொள்கைக்கும் அடிப்படைத் தத்துவங்களுக்கும் விரோதமாயிருக்குமாதலால் தூது கோஷ்டியாருடைய நோக்கம் இதுவாக இருக்க முடியாதென்று சுட்டிக்காட்டப்பட்டது. ஒரு மாகாணத்தையோ அல்லது தேசத்தின் ஒரு பகுதியையோ நிர்ப்பந்திக்கலாகாது என்றும் சுதந்திர இந்தியாவின் அரசியல் அமைப்பானது சகல கக்ஷிகளும் மாகாணங்களும் ஒத்துழைத்து நல்லெண்ணத்துடன் வகுக்கப் பட வேண்டுமென்றும் காங்கிரஸானது அரசியல் அமைப்பு விஷயமாக எப்பொழுதும் சொல்லி வந்திருக்கிறது. வைஸ்ராய் வேவல், ராஷ்டிரபதி மௌலானா ஆஸாதுக்கு ஜூன் 15-ம் தேதி எழுதிய கடிதத்தில் கீழ்க்கண்டவாறு கூறுகிறார் :—

"கோஷ்டிப் பிரிவினை முறைக்குக் காங்கிரஸ் கூறும் ஆக்ஷேபணைகளை நானும் தூது கோஷ்டியாரும் அறிவோம். ஆயினும் மே 16-ம் தேதி அறிக்கையானது கோஷ்டிப் பிரிவினை கட்டாயமாக ஏற்படவேண்டு மென்று கூறவில்லை என்று கூறவிரும்புகின்றேன். அறிக்கை கூறுவதெல்லாம் மாகாணங்களின் பிரதிநிதிகள் கோஷ்டிகளாகப் பிரிந்து உட்கார்ந்து மாகாண தொகுதிகளை ஏற்படுத்த வேண்டுமா என்பதை தீர்மானிக்கவேண்டும் என்பதேயாகும்."

மாகாணங்களைத் தொகுதிகளாக பிரிப்பது கட்டாயமாக இருக்கக்கூடாது என்ற கொள்கை இவ்விதம் மறுபடியும் வற்புறுத்தப்பட்டிருக்கிறது. அத்துடன் கோஷ்டிகளாகப் பிரிந்து நடத்தும் காரியங்களுக்கு ஒரு நடைமுறையும் வகுக்கப்பட்டிருக்கிறது. இந்த நடைமுறைத் தெளிவாக இல்லை. இதற்குப் பல விதங்களில் வியாக்கியானம் கூறலாம். ஆனல் ஒன்று மட்டும் நிச்சயம். நடைமுறை விஷயமானது அடிப்படைக் கொள்கையை நிராகரிக்கமுடியாது. இந்தத் தத்துவத்திற்கு விரோதமில்லாத வியாக்கியானமே சரியான வியாக்கியானமென்று நாங்கள் கூறினேம். எல்லோருடைய ஒத்துழைப்பும் கிடைப்பதற்காக நாங்கள் கோஷடிக் கூட்டத்தில் கலந்துகொள்கிறோமென்றும் எங்கள் வியாக்கியானம் ஏற்றுக்கொள்ளப்படாவிட்டால் அந்த விஷயத்தைப் பெடரல் கோர்ட்டுத் தீர்ப்புக்கு விட நாங்கள் சம்மதிக்கிறோம் என்றும் தெளிவாகக் கூறினேம். கோஷ்டிப் பிரிவினை சம்பந்தமான யோசனை அஸ்ஸாமையும் எல்லைப் புறத்தையும் பாஞ்சாலத்திலுள்ள சீக்கியர்களையும் அதிகமாகப் பாதிக்கிறது என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். அவர்களுடைய பிரதிநிதிகள் இந்த யோசனையைப் பலமாக ஆக்ஷேபித்தார்கள். மாஸ்டர் தாராசிங் மே 25-ம் தேதி இந்திய மந்திரிக்கு எழுதிய கடிதத்தில் இந்த யோசனையின் காரணமாக சீக்கியர்களுக்கு இருக்கும் கவலையையும் பயத்தையும் தெரிவித்து சில விஷயங்களை தெளிவுபடுத்துமாறு கேட்டு எழுதினர். அந்தக் கடிதத்திற்கு இந்தியா மந்திரி ஜூன் 1-ம் தேதி எழுதிய பதில் கடிதத்தில் கூறியதாவது :—

"நீங்கள் உங்கள் கடிதத்தின் இறுதியில் விவரமாகக் கூறியிருக்கும் விஷயங்களைக் கவனித்தேன். மந்திரி தூது கோஷ்டியார் தங்கள் அறிக்கைக்கு வியாக்கியானம் கூறவோ அதனுடன் புதிதாக விஷயங்களைச் சேர்க்கவோ முடியாது."

இப்படித் தெளிவாக அறிக்கை வெளியிட்டிருக்க இப்பொழுது பிரிட்டிஷ் சர்க்கார் மே 16-ம் தேதி அறிக்கைக்கு வியாக்கியானம் செய்யவும் புதிதாக விஷயங்களைச் சேர்க்கவும் கூடிய விதத்தில் டிஸம்பர் 6-ம் தேதி ஒரு அறிக்கை வெளியிட்டிருக்கிறார்கள். முதலறிக்கை வெளியிட்டு ஆறரை மாதங்கள் ஆகின்றன

மத வெறியர் மதியுடையவர் அல்லர்—வில்ஸன்.

இதற்குள் எத்தனையோ சப்பவங்கள் நடந்திருக்கின்றன. இப்பொழுது இவர்கள் 6½ மாதம் கழித்து இந்த அறிக்கை வெளியிட்டிருக்கிறார்கள்.

இந்தக்கால முழுவதிலும் காங்கிரஸ் தன்னுடைய நிலைமையைப் பிரிட்டிஷ் சர்க்காருக்கும் அதனுடைய பிரதிநிதிகளுக்கும் அடிக்கடி விளக்கி இருக்கிறது. இதை யெல்லாம் அறிந்துகொண்டு தான் பிரிட்டிஷ் சர்க்கார் திட்டத்தை நிறைவேற்றுவதற்கான காரியங்களைச் செய்து வந்திருக்கிறார்கள். காங்கிரஸின் நிலைமை மே 16-ம் தேதி அறிக்கை கூறும் அடிப்படைத் தத்துவங்களுக்கு முற்றிலும் ஒத்ததாகும். மேலும் எதேனும் சந்தேகம் நிகழ்ந்தால் அதை பெடரல் கோர்ட்டுக்கு அனுப்பி அதன் தீர்ப்பை எல்லா கக்ஷியாரும் எற்றுக்கொள்ள வேண்டுமென்றும் காங்கிரஸ் கூறிற்று. வைசிராய் ஜூன் 28-ம் தேதி ஜின்னாவுக்கு எழுதிய கடிதத்தில் காங்கிரஸானது மே 16-ம் தேதி அறிக்கையை ஒப்புக்கொண்டிருக்கிறது என்று கூறினார். ஆகஸ்டு 24-ம் தேதி செய்த ரேடியோ பிரசங்கத்தில் அவர் முஸ்லிம் லீகை ஒத்துழைக்குமாறு வேண்டிக்கொண்டார். காங்கிரஸானது வியாக்கியானத் தகராறுகளை பெடரல் கோர்டுக்கு அனுப்பத் தயாராக இருக்கிறதென்பதையும் சுட்டிக் காட்டினார்.

முஸ்லிம் லீக் தன்னுடைய பழைய தீர்மானத்தை ரத்து செய்துவிட்டு தூது கோஷ்டியார் திட்டத்தை நிராகரிப்பதாகவும் நேரடி நடவடிக்கையில் இறங்கப் போவதாகவும் தீர்மானம் செய்தது. திட்டத்தின் அஸ்திவாரம் இந்திய யூனியனை எற்படுத்துவதாகும். ஆனால் அவர்கள் அதைத் திரும்பத் திரும்ப ஆக்ஷேபித்து வருகிறார்கள். இந்தியாவைப் பிரிக்க வேண்டுமென்றே கேட்கிறார்கள். பிரிட்டிஷ் சர்க்கார் டிஸம்பர் 6-ம் தேதி அறிக்கை வெளியிட்ட பிறகுகூட இந்தியாவை பிரிக்க வேண்டுமென்று கூறிவருகிறார்கள். காங்கிரஸ் தன் பிரதிநிதிகளை லண்டனுக்கு அனுப்பி வைக்கவேண்டுமென்று பிரிட்டிஷ்சர்க்கார் அழைப்பு அனுப்பியது. அப்பொழுதும்கூட காங்கிரஸ் தன் நிலைமையைத் தெளிவுப்படுத்திக் கூறிற்று. பிரிட்டிஷ் பிரதம மந்திரி வாக்குறுதி தந்த பிறகே காங்கிரஸ் பிரதிநிதி லண்டனுக்குப் புறப்பட்டுச் சென்றார். இந்த வாக்குறுதி தந்த பிறகும் மே 16ம் தேதி அறிக்கையை மாற்றவோ கூட்டவோ மாட்டோம் என்று வாக்குறுதி தந்த பிறகும் பிரிட்டிஷ் சர்க்கார், மே 16ம் தேதி அறிக்கைக்குப் புறம்பாக விஷயங்களைச் சேர்த்து அறிக்கை வெளியிட்டிருக்கிறார்கள். வாக்குறுதிகளை மீறும் விதத்திலும் அதன் காரணமாக இந்திய மக்களுடைய மனத்தில் சந்தேகமும் அவநம்பிக்கையும் உண்டாகும் விதத்திலும் பிரிட்டிஷ் சர்க்கார் நடந்துகொள்வதைக் கண்டு காங்கிரஸ் பெரிதும் வருந்துகிறது. இந்த தேசத்தின் நிலைமையில் கஷ்டத்தையும் சிக்கலையும் அதிகமாக எற்படுத்தும் விதத்திலேயே பிரிட்டிஷ் சர்க்காரும் அவர்களுடைய பிரதிநிதிகளும் இப்பொழுது கொஞ்ச காலமாகக் காரியங்களைச் செய்து வருகிறார்கள். அரசியல் நிர்ணய சபை அங்கத்தினர் தேர்தல் முடிந்த பிறகு இப்படி அவர்கள் தலையிடுவதால் எதிர்காலத்தில் பெரிய ஆபத்து உண்டாகும் விதத்தில் ஒரு புதிய நிலைமையைச் சிருஷ்டித்திருக்கிறார்கள். அதனாலேயே காரியக் கமிட்டியார் இந்த விஷயத்தை நீண்ட நேரம் மிகுந்த கவலையுடன் பரிசீலனை செய்தார்கள்.

இந்தியாவிலுள்ள சகல கக்ஷியாரும் மனமுவந்து ஒத்துழைத்து சுதந்திர இந்திய அரசியலை அரசியல் நிர்ணய சபை மூலம் வகுக்க வேண்டுமென்றே காங்கிரஸ் விரும்புகிறது. அரசியல் நிர்ணய சபையின் ஆரம்பக் கூட்டத்திற்கு முஸ்லிம் லீக் நண்பர்கள் வராததைக் குறித்து காங்கிரஸ் வருந்துகிறது. ஆயினும் மற்ற வகுப்புப் பிரதிநிதிகள் எல்லோரும் வந்து ஒத்துழைப்பதைக் குறித்துச் சந்தோஷப்படுகிறது. முஸ்லிம் லீக் மெம்பர்களும் ஒத்துழைப்பார்கள் என்றே காங்கிரஸ் கமிட்டி நம்புகிறது. அதற்காகவே முக்கியமான பிரச்னைகளை முடிவு செய்யாமல் அடுத்த கூட்டத்திற்கு ஒத்தி வைக்கும்படி காங்கிரஸ் பிரதிநிதிகளைக் கேட்டுக் கொண்டிருக்கிறது.

பிரிட்டிஷ் சர்க்கார் தங்கள் டிஸம்பர் 6-ம் தேதி அறிக்கையில் வியாக்கியானம் கூறி யிருப்பது நடைமுறையைப் பற்றிய ஒரு விஷயமே யாகும். ஆனால் அவர்கள் அதை அடிப்படையான விஷயமென்று குறிப்பிடுகிறார்கள். அரசியல் நிர்ணய சபை அதைக் கூடிய சீக்கிரத்தில் பெடரல் கோர்ட்டுக்கு அனுப்பலா மென்று யோசனை கூறுகிறார்கள். ஆனால் பெடரல் கோர்ட்டுத் தீர்ப்பை அவர்கள் எற்றுக் கொள்ளத் தயாரா யில்லை என்பது பின்னால் வெளியிட்ட அறிக்கையிலிருந்து தெரிகிறது. முஸ்லிம் லீகும் பெடரல் கோர்ட்டுத் தீர்ப்பை எற்றுக்கொள்ளத் தயாராயில்லை, இந்தியாவைப் பிரிக்கவேண்டுமென்றே கூறிவருகிறது. இப்படி பிரிட்டிஷ் சர்க்காரும் முஸ்லிம்லீகும் கூறுவதால் பெடரல் கோர்ட்டுக்கு போவது அனாவசியம். காங்கிரஸின் அந்தஸ்துக்கும் இழுக்காகும். பிரிட்டிஷ் சர்க்கார் கூறும் வியாக்கியானம் மாகாண சுயஆக்ஷி என்னும் மூலாதாரமான கொள்கைக்கு முற்றிலும் முரண்பட்டதென்றே காங்கிரஸ் கருதுகிறது. அடிப்படைத் தத்துவத்திற்கு விரோதமில்லாத விதத்தில் கிடைக்கக் கூடிய ஒத்துழைப்பு அனைத்தையும் பெற காங்கிரஸ் தயாரா யிருக்கிறது. இந்தப் பிரச்னைகள் முக்கியமானதாக இருப்பதாலும் இதைக் குறித்துச் செய்யும் முடிவின் விளைவுகள் பிரமாதமானதாக இருக்குமாதலாலும், தக்கபடி ஆலோசித்து முடிவு செய்வதற்காக காரியகமிட்டியானது அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியின் அவசரக் கூட்டத்தை ஜனவரி முதல் வாரத்தில் டில்லியில் கூட்டுகின்றது.

## அகதிகளுக்கு யோசனை.

டிஸம்பர் 24-ம் தேதி காலையில் காந்தியடிகள் வெளியே உலாவி விட்டுத் திரும்பி வரும்பொழுது ஒரு முஸ்லிம் அவரிடம் ஒரு ஆப்பிள் பழத்தை கொடுக்க வந்தார். காந்தியடிகள் அதைப் புன்னகையுடன் எற்றுக் கொண்டார்.


அன்று பிற்பகல் பிரார்த்தனைக் கூட்டம் ஆரம்பிப்பதற்கு முன்னால் பெரிய பஜனை கோஷ்டி ஒன்று பக்கத்துக் கிராமத்திலிருந்து வந்தது. அநேக பெண்கள் வெகு தூரத்திலுள்ள இடங்களிலிருந்து காந்தியடிகளைத் தரிசிப்பதற்காக வந்திருந்தார்கள். அன்று மாலை பிரார்த்தனைப் பந்தலில் எள் விழ இடமில்லாதபடி கூட்டம் நிறைந்திருந்தது. காந்தியடிகள் பந்தலுக்கு வந்த பொழுது பெண்கள் குரவை யிட்டு வரவேற்றார்கள்.

காந்தியடிகள் “ தன் கையே தனக்கு உதவி ” என்ற விஷயத்தையே அகதிகளுக்கு வற்புறுத்திக் கூறினார்:-

“ வீடுகளுக்குத் திரும்பிப் போக விரும்புகிறவர்கள் கடவுளையும் தங்கள் சொந்த பலத்தையும் நம்பியே போக வேண்டும். சகாய ஸ்தாபனங்களுடைய உதவியை சதா காலமும் எதிர் பார்க்கக்கூடாது வீடுகளுக்குத் திரும்பிப் போனால் கஷ்டங்கள் எற்படலாம். ஆயினும் நீங்கள் தைரியமாக திரும்பிப் போக வேண்டுமென்றே நான் உங்களுக்கு யோசனை கூறுகின்றேன்.”

தொழிலாளி “ முடியாது ” என்று கூறினால் முதலாளி எதுவும் செய்ய முடியாது—காந்திஜி.

## காந்தியடிகள் கிழக்கு வங்காளத்தில் தவஞ்செய்யும் பகுதி.




1. சௌமொகானி
2. சோனேமுரி
3. அமிஷபாரா
4. ஜோயாக்
5. கோவிந்த்பூர்
6. அம்கி
7. நவோரி
8. சாட்கில்
9. தாப்கா
10. நோவகாலா
11. சோனசாகா
12. கில்பாரா
13. கோமதாலி
14. தஸ்காரியா
15. கோப்பேர்பாக்
16. சாகாப்பூர்
17. கார்பாரா
18. காஜீர்கில்
19. நந்தன்பூர்
20. பனியாலா
21. சந்திப்பூர்
22. தத்தப்பாரா
23. பராலியா
24. நந்திகிராம்
25. பிஜோய்நகர்
26. தவால்பஜார்
27. சார்மண்டல்
28. ஷிப்பூர்
29. சந்தோரா
30. ஸ்ரீராம்பூர்
31. சங்கிர்கான்
32. அங்கிரபாரா
33. பாத்தியால்பூர்

குறிப்பு :—ஸ்ரீராம்பூரில் காந்தியடிகளும், தடித்த எழுத்திட்ட ஊர்களில் அவருடைய கோஷ்டியாரும் தங்கியிருக்கிறார்கள்.

அச்சடித்தவர் பி. அருணாசலம், கமர்ஷியல் பிரின்டிங் அன் பப்ளிஷிங் ஹவுஸ், 46, அரண்மனைக்காரத் தெரு, ஜி. டி., சென்னை,
பிரசுரித்தவர் : சின்ன அண்ணாமலை, தமிழ்ப்பண்ணை, 6/2 நாகேஸ்வரராவ் ரோடு தியாகராயநகர், சென்னை 17.
ஆசிரியர்கள் : பொ. திருகூட சுந்தரம்; நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கம் பிள்ளை